# அங்காளம்மன் கோவிலில் விசேஷத்தின் போது செய்யும் சீர்.

## காப்புக் கட்டுதல்.

அம்மாவாசைக்கு முதல் நாள் இரவு ஐயர் வந்து கோவிலில் புண்ணியாச்சனை செய்து, பண்டாரங்கள் இரண்டு பேருக்கு வலது கையில் கங்கணம் (காப்பு) கட்டுவார். பிறகு அங்காளம்மனுக்கு வலது கையில் கங்கணம் கட்டுவார்கள்.

## கொடிக்கட்டுதல்.

புதிய வெள்ளைத்துணியில் காவியால் நந்தியின் படம் வரைந்து. பிறகு அத்துணியை மடித்து ஒரு தட்டத்தில் வைத்து, தேங்காய், பழம், வெற்றிலை பாக்கு வைத்து கங்கணம் கட்டிய பண்டாரம் வந்து அதற்கு பூஜை செய்வார். பிறகு அந்தத் தட்டத்தை கங்கணம் கட்டியிருக்கும் பண்டாரத்தின் தலையில் வைத்து பம்பை மேளத்துடன் கோவிலைச் சுற்றி வருவார்கள். அப்போது கோவிலைச் சுற்றியும் இருக்க சாமிகளுக்கு கங்கணம்

கட்டி வருவார்கள். இப்படி கோவிலைச் சுற்றி வந்ததும், கோவிலுக்கு முன் நந்தி இடைடுக்கு பின்புறம் பலிபீடத்திற்கு பின்புறம் ஒருமரம் நட்டு, அந்த மரத்திற்கு மாந்தழை, தெப்பப்புல், பூ, இவைகள் எல்லாம் வைத்துக் கட்டி, ஐயர் புண்ணியாச்சனை செய்து, பிறகு பண்டாரம் பூஜை செய்வார். பூஜை முடிந்ததும் ஐயர் கொடித்துணியை எடுத்து பண்டாரத்தின் கையில் கொடுத்து பண்டாரம் கொடியை மரத்தில் கட்டுவார். கொடி கட்டும் போது, கொடியில் இருக்கும் நந்தி கிழக்கு முகமாக வைத்துக் கட்டுவார்கள். பிறகு அம்மனுக்கு பச்சை மாவு, பழம் வைத்து பூஜை செய்வார்கள். இதே போல் அங்குள்ள எல்லாச் சாமிகளுக்கும் பூஜை செய்வார்கள்.

## மயானருத்திர பூஜை.

முதலில் மயானத்தில் தேங்காய் பழம் வைத்து பூஜை செய்வார்கள். பிறகு, சில பூசாரிகள் (பண்டாரம்)

மயானத்திற்கு சென்று அந்த இடத்தில் மண்ணை வெட்டி தண்ணீர் விட்டு பிசைந்து பெண் உருவம் ஒன்று செய்வார்கள் இந்த உருவத்தை வள்ளாலன் தேவி என்று சொல் வார்கள். அதாவது வள்ளால ராஜனின் மனைவி. பிறகு இந்த உருவத்தை சுற்றிலும் மண்ணில் 108 சிவலிங்கம் செய்து வைப்பார்கள். பிறகு, வள்ளால ராஜன் தேவிக்கு கரும்பினால் பந்தல் போட்டு பந்தலை சுற்றிலும் மாவிலைத் தோரணம் கட்டுவார்கள். பிறகு, உருவத்திற்கு பக்கம் அடுப்புக் கூட்டி பொங்கல் வைப்பார்கள்.

பிறகு கோவிலில் சுவாமியின் முன் இருக்கும் வாசல் படியில் ஒரு புது மண்பானை யொன்றைக் கழுத்தி அதன் பக்கத்தில் கொட்டை முத்து க்கள் போட்டு வைப்பார்கள். கங்கணம் கட்டிய பூசாரி இருவரும் வந்து கொட்டை முத்தை கையில் எடுத்து உகே! உகே! என்று சத்த மிட்டு புதுப்பானை மேல் அடிப்பார்கள். பிறகு, கொட்டை முத்துக்களை எடுத்து தொளித்து உள்ளேயிருக்கும் வெள்ளை முத்துக்களை

எடுத்துச் சென்று வள்ளால ராஜன் தேவிக்கு கை, கால், கண், இவைகளில் எல்லாம் கொட்டை முத்தை பதித்து அலங்காரம் செய்து, கண்ணுக்கு கோழி முட்டை இரண்டை பதித்து விடுவார்கள். பிறகு, வள்ளால ராஜன் தேவிக்கும், 108 சிவலிங்கத்திற்கும், கங்கணம் கட்டுவார்கள்.

பிறகு, கோவிலில் பேச்சியின் கோவிலுக்கு அருகில். ஒரு புது முறம் கொண்டு அதன் பின் புறத்தில் பச்சை அரிசியின் மாவால் பேச்சியின் உருவம் செய்து முறத்தின் இரு புறமும் வேப்பிலைக் கொத்து வைத்துக் கட்டி, உருவத்திற்கு சிகப்புத் துணிகட்டி அலங்காரம் செய்து விட்டு. பூசாரி ஒருவர் சிகப்புச் சேலை கட்டி பேச்சியென்ற பெண் வேசம் போட்டு உடம் பெல்லாம் விபூதி பூசி, நெத்திக்கு பொட்டு வைத்து வந்து நிற்பார்.

பிறகு, முறத்தில் செய்த பேச்சியின் உருவத்திற்கு கங்கணம் கட்டி நெத்தியில் பணம் கால் ரூபாய் வைத்து, தேங்காய் பழம்

உடைத்து வைத்து பூஜை செய்வார்கள்.
அப்போது பேச்சிவேசம் போட்டிருக்கும்
பூசாரிக்கு சாமிவந்து முறத்தில் இருக்கும்
பேச்சியை எடுத்துக் கொண்டு ஆடுவார்.
அப்போது அங்காளம்மன் விக்கிரகத்தை
சப்பரத்தில் வைத்து அலங்காரம் செய்து
நான்கு பேர் சப்பரத்தை எடுத்துக் கொண்டு
வருவார்கள். இப்படியே ஆடிக் கொண்டு
பம்பை மேளத்துடன் கோவிலைச் சுற்றி
வந்து மயானத்திற்கு செல்வார்கள். அப்
போது போகும் வழியில் கருப்பு நிறமுள்ள
ஆடு வெட்டி பலியிடுவார்கள். பிறகு, மயா
னத்திற்கு சென்று, வள்ளாலன் தேவியை
சுற்றிவந்து அங்காளம்மன் சப்பரத்தை
வள்ளாலன் தேவிக்கு எதிரில் மேற்கு முகமாக
நிறுத்தி விட்டு, பூசாரி ஒருவர் கரியை உரைத்
து உருவத்தின் கண்களுக்கு பொட்டு வைப்
பார் இதை (கண்திறப்பது) என்று சொல்வார்கள்.
பிறகு நெத்திக்கு பணம் வைத்து, சாதம் படைத்து,

தேங்காய் பழம் உடைத்து வைத்து, உருவத்தை சுற்றிலும் உள்ள 108 சிவலிங்கத்திற்கும் சாதம் தேங்காய் பழம் வைத்து, கங்கணம் கட்டிய பூசாரி வாய்க்கு துணிகட்டி முதலில் ஆகாயத்திற்கு பூஜை செய்வார். பிறகு வள்ளாலன் தேவிக்கு பூஜை செய்து, சுத்தி வந்து 108 லிங்கத்திற்கும் பூஜை செய்து விட்டு. பிறகு, முன்னடி சாமிக்கு சாதம் படைத்து தேங்காய் பழம் வைத்து பூஜை செய்வார்கள். பிறகு பன்றியொன்றை அந்த இடத்தில் அறுத்து பன்றியின் தலையை வைத்து பூஜை செய்வார்கள். அப்போது பன்றியின் தலை மூன்று முறை வாயைத் திறக்க வேண்டும். பிறகு, பன்றியின் தலையை பூமியில் மண்ணில் போட்டு மூடிவிட்டு, கருங் கோழியறுத்து பலி கொடுப்பார்கள். மூறத்தில் இருக்கும் பேச்சியின் உருவை வள்ளாலன் தேவியின் சிரசிற்கு பின்புறம் கொண்டு போய் மயானக் கொள்ளை, மயானக் கொள்ளை என்று சொல்லி முறத்தை கையில் கட்டி

பிறகு, கீழே போட்டு விடுவார்கள். பிறகு, கோவிலுக்கு வந்து பூசாரிகள் யாரும் அம்மன் இருக்கும் மண்டபத்தின் உள்ளே போகாமல் சுனைக்கு சென்று குளித்து விட்டு வந்துதான் கோவிலுக்குள் போவார்கள்.

## சிவன் பூஜை.
## அம்மையழைத்தல்.

பிறகு அன்று இரவு ஒருவேளை முடியில் 18 அபிஷேக சாமானங்களும் வைத்து பூ, மற்றும் அம்மனின் பட்டாக்கத்தியையும் வைத்து கோவிலுக்கு முன் கொஞ்ச தூரத்தில் அம்மை அழைக்குமிடத்திற்கு கொண்டு சென்று அங்குள்ள பிள்ளையாருக்கும், மற்றுமுள்ள சுவாமிகளுக்கும் அபிஷேகம் செய்து. பிறகு, நாட்டிலுள்ள சாமிகளையெல்லாம் அழைப்பார்கள். முக்கியமாக தாயனூர், மலையனூர், கரூர், அந்தூர், முத்தனம் பாளையம், கம்பளியம் பட்டி, காவையூர், தாராபுரம், திருவூர், கோயமுத்தூர், தொறவலூர், சேவூர் இப்படியாக

இவ்வூர்களில் உள்ள அங்காளம்மனை முக்கியமாக அழைப்பார்கள்.

பிறகு கங்கணம் கட்டிய பண்டாரத்தின் தலையில் பேழை மூடியை வைத்து அருள்முகத்துடன் கோவிலுக்கு புறப்பட்டு போகும் போது, இரண்டு பூசாரிகள் சேர்ந்து ஒரு வேஷ்டியை விரித்து பேழை மூடி கொண்டு போறவரின் முன்னால் ஒருவர், பின்னால் ஒருவர் குடை பிடிப்பது போல் பிடித்துக் கொண்டு பம்பை மேளத்துடன் கோவிலுக்கு வருவார்கள். அப்படி வரும்போது பூசாரிகள் விருத்தம் பாடி வருவார்கள். இப்படியே கோவிலுக்கு வந்து பேழை மூடியை கோவில் உள்ளே வைப்பார்கள். இதை படைக்களம் அல்லது, அம்மையழைத்தல் என்று சொல்வார்கள்.

பிறகு, அப்போதகே பயிர், கிழங்குகள் இவைகள் எல்லாம் வேவித்து வைத்து விட்டு. கோவிலின் உள்ளே புது முறத்தில்

தீபம் ஒன்று பொருத்தி வைத்து வேஷ்டி
நீடிக்கு துணி பிடித்து வந்தது போல்
பிடித்துக் கொண்டு நிங்கணம் கட்டிய
பண்டாரம் நிறைத்தை கையில் எடுத்துக்
கொண்டு நந்தி இறங்கி வருவார்கள்.
அப்போது நந்தி இறைச் சுற்றியும் டம்
திரைக் கட்டியிருப்பார்கள். அப்போதுதே
உள்ளே அம்மனுக்கு அபிசேகம் செய்வார்
கள். கொண்டு சென்ற தீபத்தை நந்திக்கு
அருகில் வைத்து விட்டு, நந்திக்கு அபி
ஷேகம் செய்து, அலங்காரம் செய்து,
தேங்காய் பழம் உடைத்து வைத்து
பல்லயம் படைத்து. (பல்லயம் என்பது வேக
வைத்த பயிர், கிழங்கு இவைகள்.) உள்ளே
அம்மனுக்கும் இதேபோல் படைத்து விட்டு.
நந்திக்கு பல்லயப் பூஜை செய்து தீபார்த்தனை
செய்வார்கள். அந்த ஜோதியாகப்பட்டது
உள்ளே அம்மன் முகத்திற்கு தெரிய வேண்
டும் அப்போதுதான் சிவ பெருமான் அங்கு

வந்ததாக அர்த்தம். இதைத்தான் சிவனை அழைக்கும் பூஜை யென்று சொல்வார்கள். நந்நு பூஜை முடிந்ததும் அம்மனுக்கும் பல்லயப் பூஜை செய்து விட்டு, மற்ற உள்ள எல்லாச் சாமிகளுக்கும் பல்லயப் பூஜை செய்வார்கள்.

## அழகு தெங்கசன பூஜை.

மறு நாள் காலையில் பூசாரிகள் எல்லாம் பூஜைக்கு வேண்டிய சாமானங்களை எடுத்துக் கொண்டு, சுனைக்குச் சென்று. பூசாரிகள் எல்லாம் குளித்து விட்டு, கங்கணம் கட்டிய பூசாரி விந்தைக் கும்பம் என்று சொல்லும் ஒரு மண் கும்பத்தில் தண்ணீர் எடுத்து வந்து கீழே மாத்து விரித்து கும்பத்தை வைத்து கும்பத்திற்கு தேங்காய் வைத்து கும்பத்திற்கு நூல் சுத்தி பூவினால் கும்பத்திற்கு அலங்காரம் செய்வார்கள். இப்படி அலங்காரம் செய்யும் போது துணியால் மறைத்துக்-

கொள்வார்கள். பிறகு, உகே! உகே! என்ற சத்தமிட்டு மூடியுள்ள துணியை அப்புறம் எடுப்பார்கள்.

பிறகு, தேங்காய் பழம் உடைத்து வைத்து பூஜை செய்து விட்டு, கங்கணம் கட்டிய பூசாரி தலையில் வைத்து ஆட்டம் ஆடிக் கொண்டு பம்பை மேளத்துடன் கோவிலுக்கு வந்து கோவிலைச் சுற்றி வந்து கும்பத்தை கோவில் உள்ளே கொண்டு சென்று சுவாமி முன் வாழையிலை போட்டு அதில் பச்சரிசி போட்டு, அந்த அரிசியின் மேல் கும்பத்தை வைப்பார்கள். பிறகு, அம்மனின் பட்டாக் கத்தியை எடுத்து கும்பத்தின் மேல் நிறுத்தி கங்கணம் கட்டிய பண்டாரம் இலையில் இருக்கும் பச்சரிசியை அள்ளி மந்திரம் சொல்லிக் கொண்டு கத்தி மேல் போடுவார். பிறகு, அம்மனுக்கும், கும்பத்திற்கும் தீபார்த்தனை செய்வார்கள். அப்போது சுவாமி முன் இருக்கும் திரைச்சீலையை அப்புறம் எடுப்பார்கள்.

மேல் சொன்ன பூஜை தான் அழகு தெருசெனப் பூஜை யென்று சொல்வார்கள்.

## பல்லயம் பிரித்தல்.

ஒரு பாசிப்பயறு. மூன்று கடுகு. ஆறு வெந்தயம். ஐந்து சீரகம். இரண்டு கடலை. ஏழு தேங்காய். காப்புக்கட்டி பூசாரியிடம் புது முறம் கொடுத்து மேல்ச் சொன்ன சாமானங்களை ஒவ்வொன்றாக முறத்தில் போட்டு புடைத்துக் கொண்டு உள்ளே அம்மன் அருகிலிருந்து நந்திக் குறடுவரை ஆடி வந்து. பிறகு, அந்த சாமானங்களை நந்திக் குறடின் உள்ளே கொட்டிவிடுவார்கள். இப்படி ஒவ்வொரு சாமானத்திற்கும் ஒரு முறை செய்வார்கள்.

## குண்டம் திறக்குதல்.

பிறகு, அன்று இரவு நாய்களுக்கு, மாலை சந்தனம் போட்டு. மணி வெட்டிக்கும் மாலை சந்தனம் போட்டு, நாய்க்கன் மணி வெட்டியை எடுத்து தோளில் வைத்து பம்பை மேளத் துடன் கோவிலைச் சுத்தி வந்து. குண்டத்-

திற்கிச் சென்று குண்டம் திறப்பான் நாயக்கன். பிறகு, ஐயர் குண்டத்திற்கு புண்ணியாச்சனை செய்து. கங்கணம் கட்டிய பூசாரி சந்தணக் கட்டையில் துணியைச் சுத்தி அதை எண்ணெயில் நனைத்து அதை நெருப்பில் பொருத்தி சாமிக்கெல்லாம் பூஜை செய்து பந்தத்துடன் குண்டத்திற்கு சென்று, குண்டத்திற்கு (பூக்குழி) அபிஷேகம் செய்து. பிறகு, குண்டத்தில் விறகை நிறுத்தி பூசாரி கொண்டு வந்த பந்தத்தையும் விறகின் மேல் நிறுத்திவிட்டு, தேங்காய் பழம் உடைத்து வைத்து பூஜை செய்து, எலுமிச்சம் பழம், கரும்பு இவையெல்லாம் போட்டு பூ வளர்த்துவார்கள். இப்படி மூன்று இடத்தில் விறகை கூடம்பு கட்டி பூ வளர்க்க வேண்டும். பிறகு, கோவிலுக்குள் சென்று அம்மனுக்கு பச்சை பழம் வைத்து பூஜை செய்வார்கள்.

பிறகு, அன்று நடுஜாமத்தில் அம்மனுக்கு மகா அபிஷேகம் செய்து விட்டு,

பசுமாட்டு வெண்ணையால் அம்மன் இரகம் அணிந்து அலங்காரம் செய்து விடுவார்கள். சுவாமி தெரியாமல் திரைப் போட்டு மூடி விடுவார்கள். பிறகு அக்கினிக் குண்டம் இறங்கும் பக்தர்களுக்கு தலைக்கு எண்ணை கொடுப்பார்கள். அவர்கள் எண்ணையை தலைக்குக் தேய்த்துக் கொண்டு. அங்காளம்மனை சப்பரத்தில் வைத்து அலங்காரம் செய்து சாமியையும் எடுத்துக் கொண்டு எல்லோரும் பம்பை மேளத்துடன் ஆணைக்கு செல்வார்கள். அங்கு சென்று குண்டம் இறங்கும் பத்தர்கள், பூசாரிகள், எல்லாம் குளித்துக் கொண்டு. அம்மனுக்கு அபிஷேகம் செய்து அலங்காரம் செய்து விட்டு. கங்கணம் கட்டிய பூசாரி ஒரு கும்பத்தில் தண்ணீர் எடுத்து வைத்து கும்பத்திற்கும் அலங்காரம் செய்து, தேங்காய் பழம் உடைத்து வைத்து பூஜை செய்து கும்பத்தை யெடுத்து பூசாரி தலையில் வைத்து

சப்பரத்தில் இருக்கும் சாமியையும் தூக்கிக் கொண்டு சுனையைவிட்டு வந்து சிவன் கோவில் முன் வெள்ளை மாத்து விரித்து, சக்திக் கும்பத்தையும், சுவாமியையும் மாத்தின் மேல் வைத்து விட்டு, எல்லோரும் மயானத்திற்கு செல்வார்கள். அங்கு சென்று மயானச் சாம்பலில் லிங்கம் பிடித்து வைத்து அதற்கு பூ, சந்தனம் போட்டு, லிங்கத்தின் முன். கடலை, கல்கண்டு இவைகள் எல்லாம் வைத்து லிங்கத்திற்கு பூஜை செய்து, தங்கனம் கட்டிய பண்டாரம் கடலை, கல்கண்டு, இவைகளை அள்ளி, மேலே வீசுவார்.

அப்போது குண்டம் இறங்கும் பக்தர்கள் கடலை, கல்க்கண்டு, இவைகளை அவரவர் கைக்கு கிடைத்ததை பிடித்து சாப்பிடுவார்கள்.

பிறகு, எல்லோரும் சாமி இருக்கு மிடம் திரும்பி வந்து சுவாமியை எடுத்துக் கொண்டு, பம்பை மேளத்துடன் குண்டத்துக்கு வந்து சேருவார்கள்.

அப்போது ஐயர் குண்டத்திற்கு புண்ணியாசனை செய்வார்.

பிறகு, ஆட்டுக்கியாய் கொண்டு வந்து குண்டத்தின் முன்நிறுத்தி துவக்குக் கேட்டு வெட்டுவார்கள். பிறகு, குண்டத்திற்கு பூஜை செய்து, முதலில் எலுமிச்சம்பழம் குண்டத்தில் உருட்டி விடுவார்கள். இரண்டாவது பூச்செண்டை உருட்டி விடுவார்கள். பிறகு, ஒரு பூசாரி குண்டத்தில் இருக்கும் அக்கினியை கையால் அள்ளி மூன்று முறை வீசுவார். இவ்வாறு செய்வதைக் கைக்குண்டம் போடுதல் என்று சொல்வார்கள்.

பிறகு, கைக்குண்டம் போட்ட பூசாரி முதலில் குண்டத்தில் இறங்குவார். இரண்டாவது விந்தைக் கலசம் வைத்திருக்கும் பூசாரி இறங்குவார். மறுபடி பக்தர்கள் எல்லோரும் இறங்கிச் செல்வார்கள். (குண்டத்தின் நீளம் 60 அடி.) குண்டம் இறங்கி முடிந்ததும் அங்காளம்மன் மேல் அணிந்த வெண்ணெயெல்லாம் எடுத்து விட்டு

அபிஷேகம் செய்வார்கள். தீமை (அக்கினி அபிஷேகம்) என்று சொல்வார்கள். பிறகு, சர்க்கரைப் பொங்கல் வைத்து அம்மனுக்கு பூஜை செய்வார்கள். அன்று, மத்தியானம் ஊர், பொங்கல், மாவிளக்கு பூஜை நடை பெறும்.

அன்று இரவு பிள்ளைப்பாயி எடுத்தல்.

சினையுள்ள ஆட்டுக்குட்டிலை (கர்ப்பம் உள்ள ஆடு) எடுத்து, ஒரு பூசாரி பேச்சி வேஷம் போட்டு ஆட்டுக்குட்டிலை கழுத்தில் மாலைபோட்டு அதன் ஈரலை முறத்தில் வைத்து பூசாரிக்கு சாமி அழைத்து, கோவிலைச் சுத்தி ஆடிக் கொண்டு வருவார்கள். அப்போது ஜனங்கள் எல்லாம் "பால் காசு" என்று அவரவர் இஷ்டம் போல் காலணா, அரையணா முறத்தில் போடுவார்கள். பிறகு, அந்த முறத்தை பிள்ளைக் குழி மேட்டுக்கு கொண்டு சென்று முறத்தை அங்கு வைத்து விடுவார்கள்.

பிறகு, கோவிலுக்கு வந்து கருப்பண சாமிக்கு அபிஷேகம் செய்து, ஆட்டுக் கிடாய் வெட்டி, பொங்கல் வைத்து பூஜை செய்து, பண்டாரம் எல்லோரும் சாப்பிடுவார்கள்.

## மறுநாள் காலை மஞ்சநீர் விளையாடுதல்.

சுவாமியின் கங்கணங்களை யெல்லாம் அவிழ்த்து, கொடியையும் அவிழ்த்து, மொளப்பாரியுடன் சுவாமியையும் எடுத்துக் கொண்டு, ஊர் மெரவணையுடன் மஞ்சநீர் விளையாடிக் கொண்டு கடைசியில் அணைக்குச் சென்று, அணையில் கங்கணங்களை விட்டு விட்டு, தீபார்த்தனை காட்டி விட்டு கோவிலுக்கு வருவார்கள்.